# ஆய்வுச் சிந்தனைகள்

வரிசை 13 தொகுதி 1

பதிப்பாசிரியர்கள்
வீரா.அழகிரிசாமி
சு.கண்ணன்

ஐந்தமிழ் ஆய்வாளர் மன்றம்
2014

## நூல் செய்தி

| | |
|---|---|
| நூல் தலைப்பு | ஆய்வுச்சிந்தனைகள் (Aaivu Chinthanaigal)<br>வரிசை 13 தொகுதி - 1 |
| பொருள் | செவ்வியல், சமயம்,<br>மொழியியல், பிற |
| பதிப்பாசிரியர்கள் | வீரா.அழகிரிசாமி, சு.கண்ணன் |
| பதிப்பாலோசனைக்குழு | க.நாகநந்தினி, ஆ.பாப்பா |
| மொழி | தமிழ் |
| அளவு | 1 X 8 டெம்மி |
| எழுத்து | 11 புள்ளி |
| தாள் | மேப்லித்தோ |
| பதிப்பு | முதல் பதிப்பு 24-05-2014 |
| படிகள் | 150 |
| உரிமை | கட்டுரையாளர்கள் |
| **ISBN** | **978-81-923792-8-9** |
| விலை | விற்பனைக்கல்ல (பேராளர்கட்கு மட்டும்) |
| நிகழிடம் | கொங்குநாடு கலைஅறிவியல் கல்லூரி,<br>கோவை. |
| வெளியீடு | ஐந்தமிழ் ஆய்வாளர் மன்றம், மதுரை.<br>மற்றும்<br>செப்சிரா, 24, பழைய அக்ரஹாரம்,<br>சின்னச்சொக்கிகுளம், மதுரை 625 002. |
| அச்சீடு | ஜோசப் பிரிண்டர்ஸ்<br>61 மெயின்ரோடு, பரவை, மதுரை.<br>செல் : 99946-61194 |
| அட்டை | வீரா.அழகிரிசாமி |

**இந்நூலில் இடம்பெறும் கட்டுரைக்கருத்து அந்தந்தக் கட்டுரையாளர்களுடையது.**

39. ஔவையின் உயிர்ப்புச் சூழலியல் சிந்தனை - சு. பூங்கொடி 190

40. பண்பாட்டியல் நோக்கில் உலகப் பொதுமறையும் குறிஞ்சிப்பாட்டும் - மு.நாகராஜன் 196

41. "கீழ்க்கணக்கு அகநூற்பனுவல்களில் மருதத் திணைச் சார்ந்தப்பதிவுகள்" - மு.ஐயப்பன் 201

42. ஔவையார் புறப்பாடல்களில் பெண்நிலைப் பதிவுகள் - சிந்து.மூ 205

43. புறநானூற்றில் வானவியல் - மா.சிலம்பரசன் 210

44. சங்கப் பெண் புலவர்களும் சூழலியல் பெண்ணியமும் - அனுராதா 215

45. திருவிருத்தத்தில் சங்க இலக்கியத்தாக்கம் - ரா.மகேஸ்வரி 220

46. பதினெண் கீழ்க்கணக்கில் மானிடவியல் பதிவுகள் - த.கருப்பையா 225

47. சைவத் திருமுறைகளில் அருள் - ப.சி.குருசண்முகாம்பாள் 231

48. அற்புதத்தின் அற்புதம் காரைக்காலம்மையார் - பெ.கிருஷ்ணவேணி 236

49. வைணவமும் சீக்கியமும் - ஒற்றுமைகளும் வேறுபாடுகளும் - சோ.கி.கல்யாணி 239

50. மூவர் தேவாரத்தில் மூவகைக் கற்பனைகள் - சு.சதீஷ்குமார் 244

51. நம்மாழ்வாரும் இராமலிங்க அடிகளாரும் - ஜெ.செல்வம் 249

52. சண்டேசுவரர் - ஓர் பார்வை - கிளி மொழி 254

53. சிலம்பில் சமண ஏற்பும் - பௌத்த மறுப்பும் - க.முருகேசன் 258

54. எழுத்ததிகாரத்தில் இளம்பூரணர் உரைத்திறன் - க.பழனிவேல் 263

55. பரணர் பாடல்களில் இயற்கை - த.பூங்கோதை 268

56. சிலம்பில் எண் 'மூன்று' பெறும் சிறப்பு - வி.சுகந்தா 273

57. கருவூர்ப்புராணத்தில் கருவூர்த்தேவர் - ச.பத்மினி 278

58. திணைமொழி ஐம்பதில் ஐந்நிலப்பின்னணி - இரா.மணிமேகலை 283

59. உமர்கய்யாம் பாடல்களில் உடல் தத்துவம் - மா.கருணாகரன் 288

50

# மூவர் தேவாரத்தில் மூவகைக் கற்பனைகள்

கலைகள் வளர்வதற்குக் கற்பனை அடிப்படையாக அமைகிறது. கற்பனை இல்லையென்றால் கலைகள் சிறக்காது. வரலாற்றுக்கும் இலக்கியத்திற்கும் இடையே வேறுபாடு இருக்காது. கற்பனை என்பது சிந்தனையும் காட்சியும் கலந்த கூட்டுத்திறன். புறக்கண்ணால் காண இயலாதவற்றை அகக்கண்ணால் காணுமாறு விளங்க உரைப்பது கற்பனை. புலவர்கள் தம் உணர்ச்சிக்குப் பருவடிவம் கொடுத்துச் செய்யுளில் அமைக்கும்போது, அச்செய்யுளைப் படிப்போரின் மனக்கண்முன் அப்பருவடிவம் நின்று புலவன் அடைந்த உணர்ச்சியை அல்லது அனுபவத்தைப் படிப்போரும் எய்துமாறு செய்கிறது. புலவர்கள் தம் உணர்ச்சிக்குப் பருவடிவம் கொடுப்பதைக் கற்பனை என்ற பெயரால் குறிப்பிடலாம். புலவன் தன் வாழ்வில் பார்த்தும், படித்தும், கேட்டும் அறிந்த பல்வேறு செய்திகளைக் கொண்டு கற்பனையை உருவாக்குகின்றான். கவிஞனின் உணர்ச்சியை விளக்குவதற்கு ஒரு தலைசிறந்த உத்தியாகக் கற்பனை அமைகிறது. "கற்பனை என்பது புலன்கள் நேரே ஒரு பொருளை அனுபவியாத காலத்திலும் அந்தப் பொருளை நினைவிற்குக் கொண்டுவந்து அப்பொருளினிடத்து மீண்டும் அனுபவத்தை ஏற்றவல்ல ஒருவகையாற்றல்" (கவிதையனுபவம்,ப.149) என்றும் அறிஞர் விளக்குவர். சிவநெறிச் செல்வர்களாகிய தேவார மூவரின் பாடல்களில் கற்பனை சிறப்பாக இடம் பெற்றுள்ளது. உலகியல் நிகழ்ச்சியோடு ஒன்றை ஒப்பிட்டுக் காட்டவும், உள்ளதைக் கொண்டு தெரியாத ஒன்றை விளக்கிக் காட்டவும் கற்பனையைக் கையாண்டுள்ளனர்.

**படைப்புக் கற்பனை**

கவிஞன் வெவ்வெறு சமயங்களில் கண்ட நிகழ்ச்சிகளையும் உணர்ந்த கருத்துக்களையும் ஒன்றாகச் சேர்த்து வேறு ஒரு வடிவத்தைப் படைப்பதே படைப்புக் கற்பனை ஆகும். இத்தகைய கற்பனை அப்பரடிகள் பாடல்களில் குறைவாகவும், மற்ற இருவர் பாடல்களில் மிகுதியாகவும் இடம்பெற்றுள்ளது. தேவார ஆசிரியர்கள் மூவரும் தாம் சென்ற இடங்களில் கண்ட பொருட்களின் அழகை

*சு.சதீஷ்குமார்,உதவிப்பேராசிரியர்-தமிழ்த்துறை, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோவை.*